# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

தீங்கட்கிழமை 05.07.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# கல்முனையில் தமிழர்களுடைய இடங்கள் அபகரிக்கப்படுவது இன முரண்பாட்டை தோற்றுவிக்கும்



(சந்திரன் குமணன்)

தமிழ் மக்களுடைய பூர்வீக இடங்கள் கல்முனையில் முஸ்லீம் நபர்களால் அபகரிக்கப் படுவது இன முரண்பாட்டை தோற்றுவிக்கும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

அடாத்தாக அரச காணியில் மண் நிரப்பப்பட்ட இடத்திற்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் உள்ளிட்ட கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் சம்பவ இடத்திற்கு

02 ஆம் பக்கத்தில்...

## கல்முனை பிராந்தியத்துக்கு விரைவில் தடுப்பூசி இறப்பு வீதத்தை குறைக்க ஒத்துழைப்பு வழங்கவும்

### மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை பிராந்தியத்திற்கு விரைவில் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்பு வீதத்தை தொடர்ந்தும் அதிகரிக்க இடமளிக்க

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில் நேற்று தோற்று 114;பலி 3

(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றினால் இன்று மூவர் உயிரிழந்துள்ளதுடன் 114 பேருக்கு கொரோனா தொற்று

02 ஆம் பக்கத்தில்...

## கோடிகாமத்தில் வாள்வெட்டுக் குழு அட்டகாசம்



(யாழ்.கீதன்)

கொடிகாமம் வெளி பகுதியில் நேற்று மாலை வாள் வெட்டு குழு ஒன்று அட்டகாசத்தில் ஈடுபட்டது.

வீட்டுக்குள் அத்துமீறிய சமூகவிரோதக்

02 ஆம் பக்கத்தில்...

## கோரோனா தோற்று:காத்தான்குடி தபாலகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டது

(ஜவ்பர்கான்)

காத்தான்குடி தபாலகத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் பி.சி.ஆர் மற்றும் அண்டிஜன் பரிசோதனைகள மேற்கொள்ளப்பட்டன இதில் மற்றுமொரு ஊழியருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து சுகாதார அதிகாரிகள்

02 ஆம் பக்கத்தில்...

## பயணக்கட்டுப்பாடு நீடிப்பு

(காந்தன்)

பயணக் கட்டுப்பாடுகளின் தற்போதைய தளர்வு ஜூலை 19 வரை நீடிக்கப்படும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கொரோனா தொற்று காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய புதிய சுகாதார வழிகாட்டுதல்களை வெளியிட்டு சுகாதார சேவைகள்

02 ஆம் பக்கத்தில்...

## சமூக ஊடகங்களில் விடுதலைப்புலிகள் தோடர்பில் பதிவேற்றிய திருமலையை சேர்ந்த இளைஞர் கைது




(எப்.முபாரக்)

சமூக ஊடகங்களில் விடுதலைப் புலிகள் தொடர்பில் பதிவேற்றிய திருகோணமலையை சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக திருகோணமலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டதாகவும், இவ்வாறு

02 ஆம் பக்கத்தில்...

## 'சமூக ஊடக பதிவு' கைது ரணிலின் ஆலோசனை



(காந்தன்)

சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் பதிவுகளுக்காக மக்களை கைது செய்வதை தடுக்கும் வகையில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் அரசாங்கம் திருத்தத்தை

02 ஆம் பக்கத்தில்...






## தமிழ் தேசிய தலைவர்கள் யாழில் சந்திப்பு

(யாழ்.கீதன்)

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் செயற்பாடுகளில் ஓரணியில் இணைந்து செயற்படுவது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

02 ஆம் பக்கத்தில்...

## "ஆண்டவனின் மேல் பழியை போட்டுவிட்டு ஒதுங்கியிருக்க முடியாது"



(யாழ்.கீதன்)

ஆண்டவன் காப்பாற்ற வேண்டும் என்று ஆண்டவர் மேல் பழியை போட்டுவிட்டு இருக்க முடியாது.ஒவ்வொரு அங்குலமாக எங்களுடைய நிலங்கள் பறிபோய் கொண்டிருக்கின்றதென ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

07 ஆம் பக்கத்தில்...









## உயர்தர மாணவர்களின் கவனத்துக்கு...

2021 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனினும், குறித்த விண்ணப்பங்கள் இணைய வழி (Online) முறை மூலமாக மாத்திரமே ஏற்றுக்கொள்ளப் படஉள்ளது.

02 ஆம் பக்கத்தில்...









## மக்கள் பின்பற்ற வேண்டிய புதிய சுகாதார வழிகாட்டல்கள்

கொரோனா பரவல் நிலைமையை கருத்திற்கொண்டு மக்கள் பின்பற்ற வேண்டிய புதுப்பிக்கப்பட்ட சுகாதார வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளது.இந்த சுகாதார வழிகாட்டல்கள் இன்று முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை அமுலாகவுள்ளன.

02 ஆம் பக்கத்தில்...

# தமிழ் தேசிய தலைவர்கள் யாழில் சந்திப்பு

தமிழீழ விடுதலை இயக்கத்தின் மாவட்ட காரியாலயத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பில், இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா,தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன்,தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

டெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள்அனைவருக்கும்அழைப்புவிடுக்கப்பட்டிருந்த போதும்,சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என்.சிறிகாந்தா, அனந்தி சசிதரன்,பொ.ஐங்கரநேசன் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கொடிகாமத்தில் வாள்வெட்டுக் குழு

கும்பலைச் சேர்ந்தோர் வீட்டின் வேலித் தகரங்களை சேதப்படுத்திவிட்டு தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மக்கள் பின்பற்ற வேண்டிய புதிய சுகாதார வழிகாட்டல்கள்

இந்த சுகாதார வழிகாட்டல்கள், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தனவினால் வெளியிடப்பட்டுள்ளது.

பொது போக்குவரத்து சேவைகளில் பயணிக்க, ஆசன கொள்ளளவில் 50 சதவீதமானோருக்கு மாத்திரமே அனுமதிமேல் மாகாணத்தில் இந்த எண்ணிக்கை 30 சதவீதமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தனியார் மற்றும் வாடகை வாகனங்களில் ஆசன எண்ணிக்கைக்கு மாத்திரமே பயணிகள் பயணிக்க முடியும்.

ஆடைத்தொழிற்சாலைகள் உட்பட ஏனைய தொழிற்சாலைகள் இயங்குவதற்கு அனுமதி

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான ஊழியர்களைக்கொண்டு இயங்க அனுமதி.

சேவை அவசியத்துக்கு ஏற்ப, கடமைக்கு அழைக்கப்படக்கூடிய ஊழியர்களின் எண்ணிக்கையை நிறுவன பிரதானி தீர்மானிக்கலாம்.

வீட்டிலிருந்து பணியாற்றக்கூடியவர்கள் அதனை நடைமுறைப்படுத்துவது சிறந்ததாகும்.

திருமண நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதி இல்லை.

எனினும் மணமகன் மற்றும் மணமகள் உட்பட ஆகக்கூடியது 10 பேரை மாத்திரம் கொண்டு பதிவு திருமணத்தை நடத்தலாம்.

கொவிட் அல்லாத காரணத்தினால் மரணிப்போரின் இறுதிக்கிரியைகள் பூதவுடல் கையளிக்கப்பட்டு 24 மணித்தியாலத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இறுதி நிகழ்வுகளில் பங்கேற்க 15 பேருக்கு மாத்திரமே அனுமதி.

வங்கி, நிதி நிறுவனங்கள் மற்றும் அடகுப்பிடிப்பு நிலையங்களை திறக்க அனுமதி

இச்சந்தர்ப்பத்தில் ஒரே தடவையில் மொத்தமாக 10 வாடிக்கையாளர்கள் மாத்திரமே சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

திருமண வைபவம், வீட்டில் இடம்பெறும் விருந்துபசார நிகழ்வுகள் மற்றும் சமய நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

மத வழிபாட்டுத் தலங்கள் அனைத்தும் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும்.

சமூக களியாட்ட விடுதிகளுடனான மதுபானசாலைகள், இரவு நேர களியாட்ட விடுதிகள், சூதாட்ட மற்றும் பந்தய நிலையங்கள் என்பன தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும்.

சிறப்பங்காடிகள் மற்றும் ஆடை விற்பனை நிலையங்களில், அவற்றின் மொத்த இடப்பரப்பில் 25 சதவீதமான அளவு வாடிக்கையாளர்களுக்கு மாத்திரமே ஒரே தடவையில் அனுமதி.

விற்பனை நிலையங்களை சுகாதாதர வழிமுறைகளுக்கமைய, திறக்க முடியும்.

ஒரேதடவையில் 3 வாடிக்கையாளர்களுக்கு மாத்திரமே உள்நுழைய முடியும்.

உடற்பிடிப்பு நிலையங்களை (ஸ்பா) திறப்பதற்கு அனுமதி.

சிகையலங்கார நிலையங்களில் சுகாதார வழிகாட்டல்களின் கீழ் பணிகளை முன்னெடுக்க முடியும்.

சிறைச்சாலை, முதியோர் மற்றும் சிறுவர் விடுதிகளுக்கு செல்ல பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

திரையரங்குகள் மற்றும் நூதனசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும்.

# உயர்தர மாணவர்களின் கவனத்துக்கு...

இதற்கமைய, தனியார் மற்றும் அரச பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கு நாளை முதல் இம்மாதம் 30 ஆம் திகதி வரை உயர்தரப் பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

# பயணக்கட்டுப்பாடு நீடிப்பு

பணிப்பாளர் நாயகம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இதேவேளை ஜூலை 5 முதல் 14 நாட்களுக்கு மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகள் அமுல் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பொலிஸ், இராணுவம், சுகாதாரம், மின்சாரம், பெட்ரோலியம், நீர் வழங்கல், ஊடகங்கள் மற்றும் தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் போன்ற அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுபவர்கள் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப மாகாணங்களுக்கு இடையே பயணிக்க அனுமதி வழங்கப்படும்.

அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்களும் இந்த புதிய நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவுறுத்தியுள்ளார்.

ஜூலை 5 ஆம் திகதி முதல் மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# சமூக ஊடகங்களில் விடுதலைப்புலிகள் தொடர்பில்

கைது செய்யப்பட்டவர் சண்முகராசா விதுலஷன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்:

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மற்றும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பில் புகழ்ந்து சமூக ஊடகங்களில் பதிவுகளை பதிவு செய்தமையால் 24 வயதான இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முச்சக்கர வண்டி சாரதியான அவர் தேசிய ஒற்றுமையைச் சீர்குலைக்கும் வகையிலான பதிவுகளை பதிவேற்றியதாகவும் இது பயங்கரவாத தடை சட்டம், அரசியல் மற்றும் சிவில் உரிமைக்கான சர்வதேச சட்டம் என்பவற்றின் கீழ் குற்றமாகக் கருதப்படுவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், கைதானவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# 'சமூக ஊடக பதிவு' கைது ரணிலின்

மேற்கொள்ள வேண்டும் என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்துள்ளார்.

சனிக்கிழமையன்று ஐ.நா. தலைமையிலான இளைஞர் குழுவான பராபுரா ஏற்பாடு செய்த ஒரு இணையவழி கலந்துரையாடலில் இலங்கை எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து பேசிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

'ஒரு நபர் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டால் மட்டுமே அவரை பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்ய முடியும் என ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

சமூக ஊடகங்களில் பதிவிடுவதற்காக மக்கள் கைது செய்யப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என அவர் கூறினார்.

மேலும், உச்சநீதிமன்றங்கள் பயங்கரவாத தடுப்பு சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை முன்மொழியலாம்.அவை குறித்த பாராளுமன்றத்தில் விவாதித்து சட்டத்தில் தேவையான திருத்தங்களை கொண்டுவர முடியும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

# கொரோனா தொற்று; காத்தான்குடி

ஆலோசனையின் பேரில் தபாலகம் தற்காலிகமாக மூடப்பட்டது. எனினும் மேலும் ஒரு ஊழியருக்கு வெள்ளிக்கிழமை கொரொனோ தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 14 நாட்களுக்கு காத்தான்குடி தபாலகத்தை மூடுமாறு சுகாதார அதிகாரிகள் ஆலோசனை வழங்கியதையடுத்து தபாலகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

காத்தான்குடி தபாலகத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு அண்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டதில் மூவருக்கு கொரோனா தொற்ற உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்தே காத்தான்குடி தபாலகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.




# மட்டக்களப்பில் நேற்று தொற்று 114; பலி 3

கண்டறியப்பட்டது என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

ஏறாவூர் சுகாதார பிரிவில் ஒருவரும் , கோறளைப்பற்று மத்தி சுகாதார பிரிவில் ஒருவரும், காத்தான்குடியில் ஒருவருமாக மூவர் உயிரிழந்ததாக மேலும் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அன்டிஜன் மற்றும் பிசிஆர் பரிசோதனையில் மட்டக்களப்பு,31,காத்தான்குடி 57,ஒட்டமாவடி 02 வாகரை12, கிரான்01,கோறளைப்பற்று மத்தி 02,செங்கலடி 01, ஏறாவூர் 06,வெளிமாவட்டத்தார்02 பேர் உட்பட்ட 114 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டதாக தெரிவித்தார்.

# கல்முனை பிராந்தியத்திக்கு விரைவில் தடுப்பூசி

முடியாது. இதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க முன் வரவேண்டும். என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்தார்.

கல்முனை பிராந்தியத்தில் கொரோனா தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பான உயர் மட்ட கலந்துரையாடல் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர்.குணசிங்கம் சுகுணன் தலைமையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. இங்கு விளக்கமளித்து உரையாற்றும் போதே மாகாண பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்;

மரண வீடுகளுக்கு பொது மக்கள் அதிகளவில் செல்வது, திருமண வீடுகளில் மறைமுகமாக பலர் கலந்து கொள்வது இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. இதனை தடுக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். கல்முனை பிராந்தியத்தின் ஒவ்வொரு பிரதேசங்களும் வெவ்வேறு பிராச்சினைகளை கொண்டதாகும். அக்கரைப்பற்றில் ஒரு நிலை காணப்பட்டால் சம்மாந்துறை பிரதேசத்தில் அது வேறு நிலையாகும். இன்னொரு பிரதேசத்தில் அது இன்னொரு நிலையாக காணப்படுகின்றன.

கிராம மட்டத்தில் சிவில் சமூகத்தவர்களின் ஒத்துழைப்புக்களை பெற்று சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைய உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்போடு ஒவ்வொரு பிரதேசத்திற்குமான தனியான தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

ஜனாதிபதி தலைமையிலான கலந்துரையாடல் கூட்டத்தில் கல்முனை பிராந்தியத்திற்கு தேவையான தடுப்பூசிகளை வழங்குமாறு கோரியிருந்தேன். தற்போது சினோபாம் தடுப்பூசிகள் நாட்டை வந்தடைந்துள்ளது. அடுத்த வாரமளவில் கல்முனைக்கும் கிடைக்கப்பெறும். முதல் கட்டமாக அரச உத்தியோகத்தர்கள், கற்பிணிதாய்மார், உட்பட 65 வயதிற்கு மேற்பட்டோருக்கு இதனை வழங்கவுள்ளோம் எனவே இதனை தவறாமல் பெற்றுக்கொள்ளவேண்டும். என்று தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட அடையாளம் காணப்பட்ட எட்டு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், இராணுவ உயரதிகாரிகள் உட்பட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் உயரதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் முன்னெடுக்கப்படுகின்ற சுகாதார நடைமுறைகள் பொதுமக்கள் சார் பிரச்சினைகள் என்பன இங்கு விரிவாக ஆராயப்பட்டது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தற்போதைய நிலைமை தொடர்பாக வைத்திய அதிகாரி டாக்டர் கே. தர்ஷினி விரிவாக விளக்கமளித்தார். சுகாதார வைத்திய அதிகாரிகளால் தமது பிரிவுகளில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் குறித்து தெளிவுபடுத்தப்பட்டன.

# கல்முனையில் தமிழர்களுடைய இடங்கள் முஸ்லிம்களால்

வருகை தந்து பார்வையிட்டனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட அரச காணியை ஆக்கிரமிக்க முற்பட்ட முஸ்லிம் நபர் தடுத்து நிறுத்திய கிராம சேவையாளரை தாக்க முற்பட்டு கல்முனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் .

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட குளாமினர் பார்வையிட்டு கொண்டிருந்த போது அங்கு கூடிய சில முஸ்லிம்கள் குழப்பத்தை ஏற்படுத்தினர்.

இதற்கு முன்னர் குறித்த நபரால் கடலோர பாதுகாப்பு எல்லைக்குட்பட்ட மேற்குறித்த இடத்தில் மண் இட்டு அபகரிக்க முற்பட்ட போது கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு மண் அகற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதனை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்.... கல்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கல்முனை 1 ஞி கிராம சேவகர் பிரிவிலேயுள்ள அரச காணியொன்றில் மண் இட்டு நிரப்பும் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கை இங்குள்ள முஸ்லீம் தனிநபரால் மேற்கொள்ளப்பட்ட விடயம். இதனை கிராம சேவகர் தடைசெய்துள்ளார். கிராம சேவகர் தமது கடமையை முன்னெடுத்த போது அவர் தாக்கப்பட்டுள்ளார். இந்த இடத்தை நாங்கள் பார்வையிட்ட போது அரச காணியொன்றை விளம்பரப்பலகை அகற்றப்பட்டு மண் நிரப்பப்பட்டுள்ளது. ஏற்கனவே இங்கு அவ்வாறான செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டது. மீளவும் இவ்விடயம் இங்கு நடைபெற்றுள்ளது.

தமிழ் மக்களுடைய பூர்வீக இடங்கள் முஸ்லீம் நபர்களால் போலி ஆவணங்கள் மூலம் அபகரிக்கப்படுவதும், இங்குள்ள மக்களை சுதந்திரமாக வாழ முடியாத சூழலை உருவாக்குவதுமான செயற்பாடுகள் இங்கு இடம்பெறுகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் இந்தப் பிரதேசத்தில் தொடர்ச்சியான ஒரு வன்முறையை உருவாக்குவததாகவே இருக்கின்றது. தமிழ் மக்களின் கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தாமல் இழுத்தடித்து அந்தப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அரச காணியை ஆக்கிரமிக்கின்ற நடவடிக்கையை இந்த கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படக் கூடாது என்று எண்ணுகின்ற அரசியல்வாதியும், அவருடன் சேர்ந்த நபர்களுமே இவ்வாறான பணிகளைச் செய்கின்றார்கள்.

கடந்த மாதம் பெரியநீலாவணையில் இவ்வாறான சம்பவம் நடைபெற்று அது தடுத்து நிறுத்தப்பட்டது. தற்போது இங்கு இடம்பெற்றுள்ளது. இவ்வாறு தொடர்ச்சியாக இது இடம்பெறுவதற்கு இடமளிக்க முடியாது.

இங்கு வாழுகின்ற சமூகங்களை ஒன்றிணைக்க வேண்டுமானால் ஒரு சமத்துவமான, நடுநிலையான, நியாயமான வேலைத்திட்டங்கள் இங்கு முன்னெடுக்கப்பட வேண்டும். அதை விடுத்து இவ்வாறான ஆக்கிரமிப்புகள் இடம்பெறும் போது அது சமூகங்களுக்கிடையில் பாதிப்பினை ஏற்படுத்தும். இங்கிருக்கின்ற இரண்டு சமூகங்களையும் இணைக்க வேண்டுமாக இருந்தால் அவர்களுடைய சுதந்திரமான நீதியான நிருவாக நடைமுறையைக் கையாள்வதற்குரிய அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது இந்த நாட்டின் தலைவர்களுடைய தலையாய கடமையாக இருக்கின்றது.

எனவே இவ்வாறான ஆக்கிரமிப்புப் பணிகள் இத்துடன் நிறத்தப்பட வேண்டும். சமூகங்களை ஒற்றமைப்படுத்த வேண்டும். அரச காணிகள் பாதுகாக்கப்பட வேண்டும். இங்கு பொதுவான சில மக்களுக்குத் தேவையான கட்டிடங்கள் அமைக்கப்படுகின்ற போது அரச காணிகள் இல்லையெனக் கூறப்படுகின்றது. எனவே இவற்றின் உண்மைத் தன்மை கண்டறியப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.




SwissLife Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


SJ SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு.
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும்
பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen



# மீண்டும் வீதிக்கு இறங்கிய கொட்டகலை தோட்ட தொழிலாளர்கள்

(க.கிஷாந்தன்)

20 கிலோ கொழுந்து பறிக்காவிட்டால் மூன்று நாட்கள் மாத்திரமே வேலை வழங்கப்படும் என்ற தோட்ட நிர்வாகத்தின் முடிவைக் கண்டித்தும், தமது தொழில் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியும் கொட்டகலை, டிறேட்டன் டீ.டி பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதியும் மேற்படி விடயங்களை முன்னிலைப்படுத்தி தொழிலாளர்கள் போராடினர். எனினும், இன்னும் அவர்களுக்கு தீர்வு முன்வைக்கப்படவில்லை. எனவே, உடனடி தீர்வை கோரியே மீண்டும் பணி புறக்கணிப்பு போராட்டத்தில் இறங்கினர்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என சட்டப்பூர்வமாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள நிலையில், தமக்கு 800 ரூபாவே வழங்கப்படுகின்றது என சுட்டிக்காட்டும் தொழிலாளர்கள், தோட்ட முகாமையாளரை இடமாற்றம் செய்தாக வேண்டும் என விடாப்பிடியாகவும் நிற்கின்றனர்.

நாளொன்றுக்கான பெயருக்கு 17 கிலோ கொழுந்தே முன்னர் பறிக்கப்பட்டது. ஆனால் தற்போது 20 கிலோவுக்கு குறைவாக பறிப்பவர்களுக்கு வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே வேலை வழங்கப்படும் என நிர்வாகத்தால் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்புக்கு தொழிலாளர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுவருவதுடன், தொழிற்சங்கங்கள் உரிய நடவடிக்கையை எடுக்க தவறிவருகின்றன எனவும் சுட்டிக்காட்டினர்.

சம்பளத்துக்கு போராடினால் தொழிலாளர்கள் பழிவாங்கப்படுகின்றது. அவ்வாறான நடவடிக்கை தற்போது எமது தோட்டத்தில் நடக்கின்றது. அடிப்படை நாட் சம்பளத்துக்கு 17 கிலோ கொழுந்து பறித்தால் போதும் என்ற ஏற்பாடு உள்ள நிலையில் கம்பனிகள் தான்தோன்றித்தனமாக செயற்படுகின்றன. நிர்வாகத்தின் தான்தோன்றித்தனமான - அடாவடித்தனமான - தொழிலாளர்களை அடிமைகளாக வழிநடத்தும் செயற்பாட்டை அனுமதிக்க முடியாது. ஆகவே, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கமும் இப்பிரச்சினையில் தலையிட்டு உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என மீண்டும் கோருகின்றோம் எனவும் போராட்டத்தில் பங்கேற்ற தொழிலாளர்கள் குறிப்பிட்டனர்.

# ஆலையடிவேம்பு மக்கள் வங்கி கிளையில் ஏ.ரி.எம் வசதி சேவையை துரிதப்படுத்துமாறு கோரிக்கை

( செல்வி வினாயகமூர்த்தி)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலக பிரிவிற்குள் இயங்கி வரும் மக்கள் வங்கி கிளையில் பணபரிமாற்ற தன்னியக்க இயந்திரமான ஏ.ரி.எம் வசதியின்மையால் இப்பிரதேசத்திலுள்ள மக்கள் பெரும் சிரமங்களை பல வருடங்களாக எதிர் கொண்டு வருகின்றனர். குறிப்பாக இப்பிரதேச மக்கள் வங்கி வாடிக்கையாளர்கள்,அரச தனியார் ஊழியர்கள்,தனியார் நிறுவனங்கள்,வர்த்தகர்கள், சமூக அமைப்புக்கள் என பல்வேறு தரப்பினரும் ஏ,ரி,எம் வசதியின்மையால் பல்வேறுபட்ட சிரமங்களை இன்றுவரை எதிர் நோக்கி வருகின்றனர்.

மேலும் கொரோனா தொற்று காரணமாக ஒரு மாதம் வரை பயணத்தடை நாடு முழுதும் அமுல்படுத்தப்பட்டிருந்த வேளையில் மட்டுப்படுத்தப்பட்ட குறுகிய சேவைகளை மாத்திரமே வங்கிகள் வழங்கியிருந்தமையினால் இப்பிரதேச மக்கள் தமது கணக்கிலுள்ள பணங்களை மீளப்பெற்று தங்களது நாளாந்த அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்து கொள்ள முடியாது பெரும் சிரமத்தை இக்காலப்பகுதியில் எதிர் நோக்கியிருந்தனர்.

ஆலையடிவேம்பு பிரதேசசெயலாளர் பிரிவிலுள்ள 10 கிராம சேவகர் பிரிவுகள் அத்தோடு ஆலையடிவேம்பு,வாச்சிக்குடா,நாவற்காடு,கோளாவில்,பனங்காடு,கண்ணகிபுரம் சின்னமுகத்துவாரம்,அலிக்கம்பை உட்பட ஆலையடிவேம்பு பிரதேசசெயலகத்திற்குட்பட்ட மொத்தமாக 22 கிராமசேவகர் பிரிவிலுள்ள 26941 மக்கள் தொகை கொண்ட இப்பிரதேசத்தில் தத்தமது அத்தியாவசிய தேவைகளை இவ் மக்கள் வங்கி கிளையினூடாகவே நிறைவேற்றி வருகின்றனர்.

இதேவேளை கடந்த வருடம் குறிப்பிட்ட இவ் மக்கள் வங்கிக்கிளைக்கு நடமாடும் ஏ.ரி .எம் இயந்திர சேவை கொண்டுவரப்பட்டு பரிச்சார்த்த முயற்ச்சி ஒன்றும் மேற்கொள்ளப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் நிரந்தரமாக இப்பிரதேசமக்களுக்கு மேலதிக வசதியாக தேவைப்படும் ஏ.ரி.எம் தன்னியக்க இயந்திர வசதியினை இற்றைவரை ஏற்படுத்தாத நிலையில் அவசர தேவைகளுக்கும் வங்கி விடுமுறை நாட்களிலும் பணத்தை பெறுவதற்கு இங்குள்ள மக்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.இஇதே வேளை பணபரிமாற்ற தன்னியக்க இயந்திர வசதியை இப்பிரதேச மக்களின் அத்தியாவசிய தேவையாக கருதி இப்பிரதேசத்தில் ஒரு ஏ.ரி எம் இயந்திர வசதியை யாவது ஏற்படுத்தவென சமூக ஆர்வலர்களால் பல்வேறுபட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதில் ஒரு கட்டமாக மக்கள் மத்தியில் மாபெரும் கையெழுத்து வேட்டையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## கிழக்கில் பல மாகாண பாடசாலைகள்

# தேசிய அரசுக்கு கையளிக்கும் முயற்சிகள் அச்சமளிக்கிறது

(துறையூர் சஞ்சயன்)

காணி பொலீஸ் அதிகார கோரிக்கையுடன் மாகாண சபை அதிகாரங்களை மத்திய அரசுக்கு கையளிக்கவா ஆறு தசாப்தங்களாக போராடினோம் என தமிழ்த் தேசிய பணிச் சபை தலைவரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான கலாநிதி நல்லையா குமரகுருபரன் கேள்வியெழுப்பினார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

சமஷ்டி முறைமை, அதிகார பரவலாக்கல், அபிலாசைகள் என்று ஆறு தசாப்தங்களாக வலியுறுத்தி அஹிம்சை மற்றும் ஆயுதப் போராட்டங்களையும், அழிவுகளையும் சந்தித்தோம். இந்நிலையில் மாகாண சபையூடாக பெற்ற மாகாண பாடசாலைகளின் பாடசாலைக்கல்வி, வைத்தியசாலைகள், மாகாண சுகாதாரத்துறை என்பவற்றை இழக்க முடியுமா எனும் கேள்வி எழுகின்றது.

தேசிய பாடசாலைகள் புதிதாக அமைப்பதென்பது வேறு, நல்லது அமையுங்கள். ஆனால் புதிதாக இருக்கும் மாகாண பாடசாலைகளை மாகாணசபை அபிவிருத்தி செய்து வளர்த்துவிட மீண்டும் மத்திய அரசுக்கு தாரை வார்ப்பதென்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மலையக இரத்தினபுரியில் ஒரு பாடசாலைக்காக நேற்று முன்தினம் செந்தில் தொண்டைமானின் முயற்சியால் காணி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேல் மாகாண வத்தளையில் தமிழ் பாடசாலை வேண்டும் என்று எம்மவர்களின் அரசியல் இழுபறிக்கு மத்தியிலும் இறுதியாக ஒரு தமிழ் பரோபகாரியினால் காணி வாங்கி அரச பாடசாலை அமைக்கப்பட்டது. ஏன் ஒரு மாகாண பாடசாலை விருட்சமாக வளர்ந்து எடுக்ககூடாது .

கல்வி நிர்வாகமும் சுகாதார வைத்தியத் துறையும் சிறப்பாக இயங்கும் போது, ஏன் மத்திய அரசிடம் மீண்டும் கையடக்கபடுத்த வேண்டும். இதன் மூலம் எமது அரசியல் அபிலாசைகள் அடையப்பெற்ற மாகாண அதிகாரங்கள் இழப்பாகும். அத்தோடு மாகாணங்களுக்கான ஒதுக்கீடு கட்டாயம் குறைக்கப்பட இடமுண்டு.

வேலை வாய்ப்பை மாகாண மட்டத்தில் செய்ய முடியாது தேவையானால் இன விகிதாசார அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்பட இடமுண்டு. ஆதலின் தமிழ் மக்களுக்கான வாய்ப்பு இழப்பு ஏற்பட இடமுண்டு.

கிழக்கு மாகாணத்தில் பல மாகாண பாடசாலைகள், தேசிய அரசுக்கு கையளிக்கும் முயற்சிகள் அச்சமளிக்கிறது. வட பகுதியில் வைத்தியசாலைகள் மத்திய அரசின் கீழ் கொண்டு வரப்பட முயற்சிகள் எனும் செய்திகளும் ஊடகம் வாயிலாக அறியக்கிடக்கின்றது என்றார்.



# திருமலை மாவட்ட வைத்தியசாலைக்கு மருத்துவ கருவிகள் வழங்கி வைப்பு



(பொன்ஆனந்தம்)

திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைக்கு ஒருதொகுதி மருத்துவ கருவிகள் வழங்கப்பட்டுள்ளன நண்பர்களிடமிருந்து பெற்ற நிதி மூலம் அன்புவழிபுரம் சிவில் சமூகத்தினால் இவை வழங்கி வைக்கப்பட்டது.

நான்கு syringe pump மற்றும் மூன்று infusion pump போன்றவை இதன்போது நிருவாகத்திடம் வழங்கப்பட்டன. அனைத்து கருவிகளும் மொத்தமாக ரூ. 6, 61,500.00 பெறுமதியானவை எனவும் அன்புவழிபுரம் சிவில் சமூகம் அறிவித்துள்ளது.

# எனது முயற்சிக்கு முட்டுக் கொடுங்கள்

## போரில் காலையிழந்த முன்னாள் போராளி கோரிக்கை

(திருக்கோவில் நிருபர்)

நான் யுத்தம் காரணமாக ஒரு காலையிழந்து இலங்கை அரசினால் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு தற்போது அம்பாரை பொத்துவில் பிரதேசத்தில் குண்டுமடு கிராமத்தில் சுயதொழில் முயற்சியினால் எனது அன்றாட வாழ்க்கையை முன்னெடுத்து வருகின்றேன் எனது முயற்சிக்கு முட்டு கொடுங்கள் என 52வயதான முன்னாள் போராளி பூபாலபிள்ளை தங்கமணி கோரிக்கை விடுத்துள்ளார்.

இவர் அரசினால் 2012ஆண்டு வெலிக்கந்தை புதிய சேனபுர முகாமில் புனர்வாழ் அளிக்கப்பட்டு பின்னர் சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிலையில் தனது மனைவி மற்றும் மூன்று பெண் பிள்ளைகளுடன் பொத்துவில் 09 குண்



டுமடு கிராமத்தில் வசித்து வருவதுடன் சிரட்டைக் கைபொருள் உற்பத்திகளை விற்பனை செய்வதன் ஊடாக தனது வாழ்க்கையினை மிகவும் சிரமத்துக்கு மத்தியில் முன்னெடுத்து வருகின்றார்.


இந்நிலையில் நாட்டில் ஏற்பட்டு இருக்கும் கொரோனா நோய் தாக்கம் காரணமாக பொத்துவில் அறுகம்பை சுற்றுலாப் பிரதேசம் சுற்றுலாப் பயணிகள் வராது வெறிச்சோடி இருப்பதன் காரணமாக தனது சிரட்டைக் கைப்பணிப் பொருட்களின் விற்பனையும் விழ்ச்சி அடைந்துள்ளது.

இந்நிலைமை காரணமாக எனது பொருளாதாரம் வெகுவாக பாதிப்படைந்துள்ளதுடன் போரில் ஒரு காலையிழந்த நிலையிலும் தொற்றா நோய் காரணமாகவும் வேறு ஒரு தொழிழுக்கும் செல்ல முடியாது நான் மிகவும் பொருளாதார ரீதியாகவும் உடல் உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளளேன்.

எனது நிலைமைகளை கவனத்தில் கொண்டு எனது சுயதொழிலை மேலும் வலுப்படுத்தும் வகையில் நவின கருவிகளை பொற்றுக் கொள்வதற்கும் அதனை விற்பனை செய்வதற்கான ஒரு நிலையத்தினை அமைத்துக் கொள்ளும் பொருட்டும் எனக்கு உதவி புரியுமாறு இலங்கை அரசிடமும் புலம்பேர் தமிழ் சமூகத்திடம் கோருவதாத முன்னாள் போராளி பூபாலப்பிள்ளை தங்கமணி வேண்டி நிற்கின்றார்.







கோடைகால சுற்றுலா
கொண்டாட்டம்
இத்தாலி
2021
பயணம் வாழ்க்கையின் வழிகாட்டி...
24.07.2021 முதல்
30.07.2021 வரை
031 991 85 31
079 964 04 74
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels


நல்லூர் சுவையகம்
உங்கள் இல்ல விழாக்கள் அனைத்தையும் சிறப்பித்திட
எங்கள் சைவ அசைவ உணவுகளைக்கொண்டு
மெருகூட்டுங்கள்.
Party Service
சுவிஸ் முழுவதிற்கும் எமது சேவை
மலிவு, தரம், நம்பிக்கை
எங்கள் விளம்பத்தை உடனுக்குடன் தெரிந்து கொள்வதிற்கு
எங்கள் Fb பக்கத்தை லைக் செய்யுங்கள். Nallur Travels
Nallur Angadi Murtenstrasse 269, 3027 Bern.
031 991 85 31 | 079 964 04 74


கோடைகால
சுற்றுலா கொண்டாட்டம்
10.07.2021 முதல் 16.07.2021 வரை 31.07.2021 முதல் 6.08.2021 வரை
Amazing
Spain
it begins with the
pepole...
பேருந்து
புறப்படும் இடங்கள்
St Galan | Zurich | Baden
Aarau | Bern | Freiburg
Lausanne & Geneva.
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels
031 991 85 31
079 964 04 74


2021
கோடைகால
சுற்றுலா
கொண்டாட்டம்
Wonderful
Portugal
17.07.2021 முதல்
23.07.2021 வரை
031 991 85 31
079 964 04 74
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels





# பசில் ராஜபக்ஷ நாடாளுமன்றம் வந்தால் வலுச் சேர்க்கின்றதாக அமையும்

## பிள்ளையான் எம்.பி.



(ரக்ஸனா)

பஸில் ராஜபக்ஷ இந்த அரசாங்கத்தின் ஒரு பிரதானமான பங்குதாரர், அவர் நாடாளுமன்றம் வந்தால் இன்னும் அது வலுச் சேக்கிறதாக அமையும். தமிழ் தேசியக் கூட்டமைப்பு அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அவர்கள் தெரிவிக்கும் கருத்து வேடிக்கையாக இருக்கின்றது என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேச செயலகத்திற்குபட்பட்ட ஆனைகட்டியவெளி - சின்னவத்தை 2 கிலோமீற்றர் நீளம் கொண்ட பிரதான வீதி அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு ஒரு இலெட்சம் வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் காபட் வீதியாக செப்பனிடுவதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் இதன்போது பிரதம அதிதியாகக் காலந்து கொண்டு வீதியின் அபிவிருத்திப் பணிக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார்.

5 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தி செய்யப்பட்டவுள்ள குறித்தவீதியின் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைத்துவிட்டு அப்பகுதியிலுள்ள எல்லைப்புறக் கிராமங்களின் நிலமையை ஆராய்ந்து மக்களின் குறைநிறைகளையும் நேரில் சென்று கேட்டறிந்தார். இதன்போது அப்பகுதியிலுள்ள விவசாயக் குளத்தை அபிவிருத்தி செய்தல், சின்னவத்தை கிராமத்தில் பழுதடைந்துள்ள பாலர்பாடசாலைக் கட்டடத்தை புணரமைத்தல், ஆலயத்தின் கட்டுமானப் பணிக்கு உதவுதல், உள்ளிட்ட பல கோரிக்கைகளை அப்பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம், முன்வைத்தனர்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சுபீட்சத்தின் நோக்கு ஒரு இலெட்சம் கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் போரதீவுப் பற்றுப் பிரதேசத்தின் ஆனைகட்டியவெளி சின்னவத்தை கிராமத்துக்களான 2 கிலோ மீற்றர் நீளம் கொண்ட பிரதான வீதிக்கான அபிவிருத்திப் பணிகளை நாம் ஆரம்பித்து வைத்திருக்கின்றோம். இதன் அபிவிருத்திப் பணிகள் மிக விரைவில் பூர்த்தி செய்யப்படும். இப்பிரதேசத்தில் மிகவும் முக்கியமான வீதியாகவும், மழைகாலத்தில் மூழ்கடிக்கப்படும் இவ்வீதி தற்போது புணரமைக்கப்படுவதையிட்டு இப்பகுதி மக்களும் மிகவும் சந்தோசமடைந்துள்ளதையும் எம்மால் உணரக்கூடியதாகவுள்ளது.

இயற்கை உரப்பாவனை என்பது மக்களைக் கஸ்றறப்படுத்த வேண்டும் என எடுக்கப்பட்ட முடிவல்ல. இது நாட்டு மக்களுக்குத் தேவையான ஒரு முடிவாகும். ஏனெனில் இரசாயன உரப் பாவனைகளால் நமக்குத் தெரியாமலேயே தொற்றா நோய்கள் அதிகரித்துள்ளன. இரசாயனங்கள் தண்ணீரில் கலப்பதனால் சிறுநீரகப் பாதிப்பும் அதிகரித்துள்ளது. எனவே இதனை தொடர்ந்து அனுமதித்தால் ஒரு பலவீனமாக மக்களைத்தான் நாம் எதிர்காலத்தில் எதிர்கொள்ளவேண்டி வரும். மக்களும் வருத்தங்களுக்குத் தீர்வுகாண வைத்தியசாலைகளுக்குச் செல்கின்றார்களே தவிர இதனை நிரந்தரமாக முடிவுறுத்துவதற்கான விடையங்கள் தொடர்பில் ஆராயவில்லை. குறிப்பான விவசாயிகளும், நஞ்சு என தெரிந்தும் அதனை சாப்பிட வேண்டிய சூழலுக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

ஜனாதிபதி ஒரு இறுக்கமான காலகட்டத்தில் இந்த முடிவை எடுத்திருக்கின்றார். இதனை அமுலாக்கிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு ஆளும் கட்சி என்ற அடிப்படையில் எனக்கும் இருக்கின்றது. இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப்; பின்னர்தான் இந்த செயற்கை உரம் எல்லாம் கண்டு பிடித்தார்கள். அதற்கு முன்னர் எமது மூதாதையர்கள் எவ்வாறு விவசாயம் செய்தார்கள். பின்னர் யுத்தம் இடம்பெற்ற காலங்களிலும் ஆங்காங்கே சிறிய அளவிலான உரங்கள்தான் பாவனையிலிருந்தன.

அதுபோல் உரிய முறையில் விவசாயம் செய்தால் மண்ணை மலட்டுத்தன்மையிலிருந்து பாதுகாக்கலாம் என மண்ணை நேசிக்கின்ற விவசாயிகள் தெரிவிக்கின்றார்கள். ஆனால் பெரிய பெரிய முதலாளிமாரும், உரம் இறக்கும் கம்பனிகளும்தான் இதனை பலமாக எதிர்க்கின்றார்கள். இம்முறை விவசாயம் செய்து கொண்டிருக்கின்ற விவசாயிகளுக்கு உரம் வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது அதற்கு உரம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. சிலர் உரத்தை பதுக்கியும் வைத்துள்ளார்கள்.

விவசாய அமைச்சர் அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்து இங்குள்ள நிலமைகளை அவதானித்தார். குறிப்பாக நெல்லின் விலை, அரிசியின் விலை அதிகரிக்காமல் செல்வது, சேதனைப் பசளை பாவனைகளை அமுல்படுத்துவது தொடர்பிலும் ஆராய்ந்துகொண்டு சென்றுள்ளார்.

எவ்வாறாயினும் எதிர்வரும் போகத்திற்கு அனைவரும் சேதனைப் பசளை உற்பத்தியில் அதிக நாட்டம் செலுத்த வேண்டும். இதனால் ஆரோக்கியமான நமது சமூதாயத்தைக் கட்டியெழுகப்பலாம். என தெரிவித்த அவர்.

பஸில் ராஜபக்ஸ அவர்கள் இந்த அரசாங்கத்தின் ஒரு பிரதானமான பங்குதாரர் அவர் நாடாளுமன்றம் வந்தால் இன்னும் அது வலுச்சேக்கிறதாக அமையும். எனவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அவர்கள் தெரிவிக்கும் கருத்து வேடிக்கையாக இருக்கின்றது எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

# வெருகல் பூநகரில் சௌபாக்கியம் வேலைத் திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்பு



(இஃஜாஸ் ஏ பரீட்)

வெருகல் பூநகர் பிரதேசத்தில் சௌபாக்கியா உற்பத்தி கிராம வேலைத்திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்பை ஆரம்பிப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு வெருகல் பிரதேச செயலாளர் கே.குணனாதன் தலைமையில் நடைபெற்றது.

இதற்காக 100 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களை தொழில் முயற்சியாளர்களாக மாற்ற எதிர்பார்க்கப்படுகின்றது.

15000 கோழிக்குஞ்சுகள் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. இதற்காக 82 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

கோழிவளர்ப்பிற்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு குறித்த வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான அனுமதி கடிதத்தை பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவருமான கபில நுவன் அத்துக்கோரளவுடன் இணைந்து மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரளாவும் வழங்கி வைத்தனர்.

இத்திட்டத்தை சிறப்பாக மேற்கொள்ளும்போது மாதமொன்றிற்கு 30000-40000 இடைப்பட்ட வருமானத்தை பெறமுடியும்.

வருமானம் குறைந்த மக்கள் அதிகமாக வாழும் இப்பிரதேசத்தில் எவ்வித வேறுபாடின்றி அபிவிருத்தி திட்டங்களை கொண்டு வந்து பிரதேச அவிருத்தியை மேற்கொள்ள தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் மக்கள் தமது பிரதேச அபிவிருத்தியை கருத்திற்கொண்டு அரசாங்கத்தின் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும்போது இன்னும் பல அபிவிருத்திகளை இப்பிரதேசத்திற்கு கொண்டு வர முடியும் என்று இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே.பரமேஸ்வரன் ,சக உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரையின் அரசியல்காலம் தமிழ் மக்களுக்கான பொற்காலம்



(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர்.தங்கத்துரை அவர்களின் அரசியல்காலம் தமிழ் மக்களுக்கான பொற்காலமாக விளங்கியது. அவருடைய இழப்பு இன்றும் நிரப்பப்படாத இடைவெளியாகவே காணப்படுகின்றது என மூதூர் பிரதேச சபை உபதவிசாளர் சி.துரைநாயகம் தெரிவித்துள்ளார்.

அமரர். அருணாசலம் தங்கத்துரை அவர்களின் 24வது ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அமரர். தங்கத்துரையினுடைய அரசியல்காலம் தமிழ் மக்களால் பொற்காலமாக உணரப்படுகின்றது ஏனெனில் அவர் அரசியலில் இருந்த காலப்பகுதியில்தான் தமிழ் மக்களின் பல பிரதேசங்கள் அபிவிருத்தி கண்டன. அதுமட்டுமல்லாமல் தமிழ் மக்களுக்கான பல வேலை வாய்ப்புகளும், பல குடியேற்றங்கள் மூலம் பல ஏழைகளுக்கான வாழ்விடங்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டன. இவை பலமான அரசுக்கு எதிராக எதிர்வரிசையில் இருந்து சாதித்தவை என்றால் அது தங்கத்துரையின் அரசியல் சாணக்கியம் என்றுதான் கூற வேண்டும். இதனால் இன்றும் இவர் ஏழை மக்களால் கடவுளாக பார்க்கப்படுகின்றார் என்பதை அவர்களின் வீட்டுச் சுவரில் புன் சிரிப்புடன் இருக்கின்ற அவரது புகைப்படத்தைப் பார்த்து தெரிந்து கொள்ள முடியும்.

தமிழ் மக்களின் எதிர்காலம் கல்வியிலும், விவசாயத்திலுமே தங்கியிருக்கிறது என்ற துர நோக்குடன் செயற்பட்டு தனது அரசியல்காலங்களில் அது தொடர்பான அபிவிருத்தியில் அதிக அக்கறை செலுத்தியிருந்தார். அதன் பலனாக பல கல்விச் சாலைகள் உருப் பெற்றதோடு பல குளங்களும் புத்துயிர் பெற்றிருந்தன. அந்த காலத்தில் கிண்ணியாவைச் சேர்ந்த ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் மூதூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும் தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை பிரதி அமைச்சராகவும் இருந்த ஏ.எல். அப்துல் மஜீத் அவர்களும் தங்கத்துரை அவர்களும் அரசியலில் ஜாம்பவான்களாக இருந்தார்கள்.

அரசியல் ரீதியாக இருவருக்கும் இடையில் போட்டித்தன்மை இருந்தாலும் மக்களுக்கான பணியை இணைந்தே முன்னெடுத்திருந்தார்கள். அந்தவகையில் அவருடைய ஒத்துழைப்பையும் பெற்று பல சேவைகளை இனம், மதம், மொழி வேறுபாடு இன்றி அனைவருக்கும் வழங்கியிருந்தார். குறிப்பாக பல இஸ்லாமிய மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் வேலைவாய்ப்பைக்கூட பெற்றுக் கொடுத்திருந்தார்.

இவரை இஸ்லாமிய மக்கள் தங்கத்துரை அண்ணன் எனவும் சிங்கள மக்கள் தங்கத்துரை மாத்தையா எனவும் உரிமையோடு அழைக்குமளவிற்கு முஸ்லீம் மற்றும் சிங்கள மக்களுக்கிடையிலான நெருக்கத்தை அவர் கொண்டிருந்தார். இதனை மெய்ப்பிக்கும் முகமாக ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் திருகோணமலை மாவட்ட முன்னாள் அமைப்பாளரான மூதூர் அனஸ் அவர்களினால் தங்கத்துரைக் காவியம் என்ற நூல் வெளியிடப்பட்டிருந்தது. இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். எனவே இதுபோன்றதொரு இன நல்லுறவுடன் மக்களுக்கு சேவையாற்றிய அரசியல்தலைவனை நாம் இழந்து விட்டோம். அவருடைய இழப்பு மூதூர் பகுதி மக்களுக்கு பெரியதொரு வெற்றிடத்தை விட்டுச் சென்றிருக்கிறது.



# வவுணதீவில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பிரசவகால பொருட்கள் வழங்கி வைப்பு



(எஸ்.சதீஸ்)

வவுணதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவிற்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பிரசவகால பயன்பாட்டுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சமூக நலன் விரும்பி இளைஞர்களால் குறித்த பிரசவகால பயன்பாட்டுப் பொருட்கள் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று நிலைமை காரணமாக கர்ப்பிணித் தாய்மார்கள் பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையினை கருத்திற்கொண்டு இப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் 12 கர்ப்பிணி தாய்மார்களுக்கு குறித்த பொருட்கள் வழங்கபட்டுள்ளன.






# பாலம் புனரமைப்பு தொடர்பான ஆய்வு

(பொன்ஆனந்தம்)





மூதூர் கட்டை பறிச்சான் பாலத்தினை புதிதாக புனரமைப்பு செய்வது தொடர்பான ஆய்வுப்பணி கள் மேற்கொள்ளப்பட்டன.

மூதூர் கட்டைபறிச்சான் பாலம் நிர்மாணிக்கப்பட்டு 45 வருடங்களாகின்றன.தற்பொழுது பாலம் சேதமடைந்து காணப்படுவதால் அப்பாலத்தினை புனரமைப்பது தொடர்பான ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சனிக்கிழமை நடைபெற்ற இவ்வாய்வுப்பணியில் மூதூர் பிரதேச சபைத் தவிசாளர் எம். ஏ. அரூஸ் , பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீக் மூதூர் பிரதேச சபை உறுப்பினர் திருமதி. ஜெயமாலா ஆகியோரும் பாலம் அமைந்துள்ள பகுதிக்குச்சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இதன்போது அப்பாலத்தினை வடிவமைக்க வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் ஜப்பார் குறிப்பிட்ட இடத்திற்கு விஜயம் செய்து தேவையான ஆய்வு மற்றும் அளவீடு செய்து வடிவமைப்பைச் செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டார்.

தற்பொழுது 3.5 மீற்றர் அகலமாக உள்ள பாலம் புதிதாக 7 மீற்றர் அகலமான பாலமாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

என கலந்து கொண்ட உயர் குழுவினர் தெரிவித்தனர். இப்பாலம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது. மறைந்த அமைச்சர் அப்துல் மஜீத் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டு, பின்னர் ஆட்சி மாற்றத்தின் பின்னர் எம். ஈ. எச் மகரூப் அவர்களின் காலத்தில் பாலம் நிர்மானப்பணி நிறைவடைந்து திறந்து வைக்கப்பட்டது. சுமார் 44வருடங்கள் கடந்த நிலையில் சேதமடைந்துள்ளதாக பல முறைஜ பொதுமக்கள் முறையிட்டு வந்தனர். இந்நிலயில் முதற்கட்ட ஆய்வுப்பணி நேற்று சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.




# கோரோனாவினால் இறப்பவர்களை அடக்கம் செய்வதை காட்டி பணம் வசூலிப்பவர்களுக்கு எதிராக முறைப்பாடு

(ந.குகதர்சன்)

ஒட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் சூடுபத்தினசேனை பகுதியில் கொரோனாவினால் மரணமடைந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதை காட்டி பணம் வசூலிப்பவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

கொவிட்19 ஜனாஸா நல்லடக்கம் தொடர்பாக நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு ஓட்டமாவடி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்ற போது மேற்சொன்னவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் சூடுபத்தினசேனை பகுதியில் கொரோனாவினால் மரணமடைந்தவர்களின் உடல்கள் அடக்கம் செய்யும் வகையில் சிலர் மரணமடைந்தவர்களின் உறவினர்களிடம் பணம் வசூலிப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

அந்தவகையில் இவ்விடயம் தொடர்பில் பொலிஸ் உயர்பாதுகாப்பு பிரிவு மற்றும் புலனாய்வு பிரிவினருக்கு எழுத்து மூலம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மகஜர் அனுப்பி வைக்கப்பட்டதோடு, வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திலும் பிரதேச சபையினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உடல்கள் அடக்கம் செய்யும் வகையில் யாரும் பணம் வசூலித்தால் அவர்களை எங்களிடம் யார் என்று அடையாளப்படுத்துங்கள். அவ்வாறானால் எங்களுக்கு இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இலகுவாக அமையும். ஆனால் ஓட்டமாவடி பிரதேச சபையினால் எந்தவிதமான பணமும் வசூலிக்கப்படுவதில்லை என்ற செய்தியை நாட்டு மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.



ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் சூடுபத்தினசேனை பகுதியில் கொரோனாவினால் மரணமடைந்தவர்களின் உடல்கள் இதுவரை 862 அடக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில் கொரோனாவினால் மரணிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் இடம் போதாமை காரணமாக ஓட்டமாவடி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வாகனேரி சாப்பமடு பகுதியில் அடக்கம் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி ஓட்டமாவடி பிரதேச செயலாளர், மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக கோரிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சூடுபத்தினசேனை பகுதியில் இன்னும் முன்னூறு அளவில் உடல்களை அடக்கம் செய்ய வாய்ப்புக்கள் உள்ளதாக அறிய முடிகின்றது. நாடளாவிய ரீதியில் அடக்கம் செய்வதற்கு இடம் எட்டப்படாத நிலையில் அவசரமாக இடம் தேவைப்படும் பட்சத்தில் அருகில் காணப்படும் இரண்டு ஏக்கர் காணிகளை பெறுவதற்கும் அடையாளப்பட்டுள்ளது.

எனவே நாடளாவிய ரீதியில் உள்ள அரசியல்வாதிகள், புத்தஜீவிகள், கல்வியலாளர்கள் மிக விரைவாக உடல்களை அடக்கம் செய்வதற்கான வேறு இடங்களை தயார்ப்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும் என்றார்.

குறித்த ஊடக சந்திப்பில் பிரதேச சபை செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன், சபை உறுப்பினர்களான ஏ.ஜி.அமீர், எம்.பி.ஜௌபர், எஸ்.ஏ.அன்வர், ஓட்டமாவடி வர்த்தக சங்க தலைவர் எச்.ஏ.சி.நியாஸ், ஓட்டமாவடி அரிசி உரிமையாளர் சங்க ஆலோசகர் எம்.எஸ்.ஹலால்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முன்னாள் அமைச்சர் பஷீரை தேசிய பட்டியல் எம்.பி ஆக்கி பசிலுடன் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்

## அனைத்து கட்சி செயற்பாட்டாளர்கள் ஒன்றியம் வலியுறுத்து

முன்னாள் உற்பத்தி திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பஷீர் சேகு தாவூத்தை தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமித்து முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஸவுடன் பாராளுமன்றத்துக்கு மொட்டு கட்சி அனுப்பி வைக்க வேண்டும் என்று அனைத்து கட்சி செயற்பாட்டாளர்கள் ஒன்றியம் கோரி உள்ளது.

அக்கரைப்பற்றில் வைத்து ஒன்றியத்தின் தலைவர் முஹமட் முஸ்தபா முஹமட் நிசாம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை ஊடகவியலாளர்களுக்கு இது தொடர்பாக தெரிவித்தவை வருமாறு;

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஸவின் பாராளுமன்ற பிரவேசம் எவ்வாறு காலத்தின் கட்டாயமோ அவ்வாறே நாட்டு பற்றாளரும், மூவின மக்களாலும் நேசிக்கப்படுகின்ற தலைவரும், சமாதானதுதுவரும், இராஜதந்திரியுமான பஷீர் சேகு தாவூத்தின்



பாராளுமன்ற பிரவேசமும் இக்கால கட்டத்தில் மிக மிக அவசியமானது ஆகும்.

மனித நேய செயற்பாட்டாளரும், மக்கள் சேவையாளருமான பஷீர் சேகு தாவூத் ராஜபக்ஸக்களின் விசுவாசியும் ஆவார். ராஜபக்ஸ அரசாங்கத்தின் மீளெழுச்சிக்கு பின்னால் பசில் ராஜபக்ஸவுடன் இணைந்து இவர் வகுத்து கொடுத்து வியூகங்கள் நிறைந்து நிற்கிறன.

குறிப்பாக ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன இருந்த போது மஹிந்த ராஜபக்ஸவை பிரதமராக கொண்ட இடைக்கால அரசாங்கத்தின் உருவாக்கத்துக்கு பின்னால் இவரின் சாணக்கியம் பஷில் ராஜபக்ஸவுக்கு பேருதவியாக அமைந்தது.

அதே போல புதிய கட்சி ஒன்றை ஸ்தாபித்து குறுகிய காலத்துக்குள் ஜனாதிபதியையும், பிரதமரையும் அக்கட்சியில் இருந்து உருவாக்கிய பஷில் ராஜபக்ஸவின் அரசியல் சித்துக்கு பின்னால் பஷீர் சேகு தாவூத்தின் புத்தியும், சத்தியும் இணைந்து நிற்கின்றன.

நாடு தற்போது முன்னெப்பொழுதும் இருந்திராத வகையில் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்ற நிலையில் பஷில் ராஜபக்ஸ பாராளுமன்றத்துக்கு பிரவேசிக்க வேண்டி நேர்ந்து உள்ள இத்தருணத்தில் அவருடன் கூடவே பஷீர் சேகு தாவூத்தும் பாராளுமன்றம் வருதல் வேண்டும். இது நாட்டுக்கும், அரசாங்கத்துக்கும், மக்களுக்கும், ராஜபக்ஸக்களுக்கும் பெருநன்மை பயக்கின்ற முன்னெடுப்பாக அமையும்.

இதற்கு அமைய பஷீர் சேகு தாவூத்தையும் உடன் பாராளுமன்றத்துக்கு அழைத்து செல்ல வேண்டும் என்கிற பெருவிருப்பத்திலேயே பசில் ராஜபக்ஸ் இருக்கின்றார் என்றும் நாம் அறிகின்றோம். அது பஷில் ராஜபக்ஸவின் அரசியல் முதிர்ச்சியின் வெளிப்பாடும் ஆகும். அவ்வாறான ஒரு உறுதிமொழி வழங்கப்பட்டு இருப்பதாகவும் தெரிய கிடைக்கின்றது.

பேருவளையை சேர்ந்த தொழிலதிபர் வர்த்தகர் மர்ஜான் பழீல் மொட்டு கட்சியின் தேசிய பட்டியல் எம். பி ஆவார். ராஜபக்ஸக்கள் கோருகின்ற பட்சத்தில் எந்தவொரு நிபந்தனையும் இல்லாமலேயே எம். பி பதவியை எப்போது வேண்டுமானாலும் துறக்க தயாராக இருப்பவர். இவரை பதவி துறக்க செய்வதன் மூலம் ஏற்படுகின்ற வெற்றிடத்துக்கு பஷீர் சேகு தாவூத்தை நியமிக்க முடியும் என்கிற பொருத்தமான ஆலோசனையையும் முன்வைக்கின்றோம்.

# தொழிலாளர்களுக்காக சர்வதேச தொழில் அமைப்பிற்கு கடிதம்:

## இராதாகிருஷ்ணன் எம்.பி.தெரிவிப்பு



(க.கிஷாந்தன்)

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை பெற்றுக்கொடுத்து அவர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விடயத்தில் சர்வதேச தொழில் அமைப்பின் (ஐ.எல்.ஓ.) தலையீடும் அவசியம். அதனைகோரி மலையக மக்கள் முன்னணி கடிதம் அனுப்பிவைத்துள்ளது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அட்டனில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வை பெற்றுக்கொடுத்துவிட்டோம் என மார்தட்டியக்குழு இன்று காணாமல்போயுள்ளது. ஆயிரம் ரூபா விவகாரத்தின் பின்னர் தோட்டப்பகுதிகளில் தொழிலாளர்கள் நிர்வாகத்தால் நசுக்கப்படுகின்றனர். தொழில் சுமைகள் அதிகரிக்கப்பட்டு, வேலை நாட்கள் குறைக்கப்பட்டுள்ளன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தோட்டப்பகுதிகளில் தொழிலாளர்கள் இன்று போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித நிபந்தனைகளும் இன்றி, முன்பு செய்த வேலையின் அளவுக்கே நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா கிடைப்பதை உறுதிப்படுத்தப்பட வேண்டும், வேலை சுமை அதிகரிக்கப்படக்கூடாது, அவர்களின் தொழில்சார் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு அவசியம் என்ப உட்பட மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்து தொழில் ஆணையாளருக்கு நாம் கடிதம் எழுதினோம். தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஒத்துழைப்பு வழங்குமாறு கம்பனிகளிடமும் கோரினோம். இருதரப்புகளுமே எமது கோரிக்கைகளுக்கு செவிமடுக்கவில்லை.

இது விடயம் தொடர்பில் அரசாங்கம் இனியும் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்குமா என தெரியவில்லை. எனவே, அரசு, கம்பனிகள் இணைந்து தீர்வுகளை வழங்கவேண்டும், இதற்கான தலையீடுகளை மேற்கொள்ளுமாறு சர்வதேச தொழில் அமைப்புக்கு தமிழ் முற்போக்கு கூட்டணியாக கடிதம் அனுப்பியுள்ளோம். தேயிலை ஏற்றுமதி என்பது சர்வதேசத்துடன் தொடர்புபட்ட விடயமாகும். இது விடயத்தில் சர்வதேச சமூகம் கவனம் செலுத்த வேண்டும்.' என்றார்.

# மூன்று அடி நீளமான சிறுத்தை உயிரிழந்த நிலையில் மீட்பு

(க.கிஷாந்தன்)

டயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேவர்லி தோட்டத்தை அண்மித்த பகுதியில் உள்ள ஆக்ரோயா ஆற்றின் ஓரத்தில் காணப்படும் புற்தரையில் நேற்று மதியம் சுமார் மூன்று அடி நீளமான உயிரிழந்த நிலையில் சிறுத்தை சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக டயகம பொலிஸார் தெரிவித்தனர்

பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்தே குறித்த சிறுத்தை சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த சிறுத்தை விஷ உணவு உட்கொண்டு உயிரிழந்துள்ளதா அல்லது எவரேனும் கொன்றுவிட்டனரா? என்பது தொடர்பாக டயகம பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதன் உடலில் காயங்களும் காணப்படுகின்றது.

குறித்த சிறுத்தையின் சடலத்தை நுவரெலியா வனஜீவராசிகள் எடுத்து சென்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# "ஆண்டவனின் மேல் பழியை போட்டுவிட்டு ஒதுங்கியிருக்க முடியாது"

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் கட்சித் தலைவர்களுக்கிடையிலான மற்றொரு சந்திப்பொன்று நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் ரெலோவின் அலுவலகத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது இனத்தை அழிக்க நினைக்கின்ற அரசாங்கத்திற்கு ஒரு பலமான சக்தியாக அமைய வேண்டும் என்ற நோக்கத்திலேயே தேசியத்தை நேசிக்கின்ற கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தோம். இரண்டாவது முறையில் நாங்கள் விடுபட்ட தரப்புகளுக்கும் அழைப்பிதழ் கொடுத்து இருந்தோம்.

யாழ்ப்பாணத்தில் எங்களுடைய காரியாலயத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.அதில் சுரேஷ் பிரேமச்சந்திரன் கலந்து கொண்டார்.நாங்கள் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்.அதைவிட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜா, சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.ஏனையவர்கள் கலந்து கொள்ளவில்லை.

நாங்கள் இதன் பிரகாரம் இந்த வாரம் நாடாளுமன்றம் கூடிய பின்னர் அடுத்த கட்டமாக மீண்டும் ஒரு கூட்டான பலமான அமைப்பாக செயல்படுவதற்கு ஒரு முடிவை எடுத்து இருக்கின்றோம்.அதன் பிரகாரம் அடுத்து வரும் நாட்களிலே நாங்கள் அழைக்க விரும்பிய தலைவர்களோடு பேசி இறுதியாக ஒரே குடையின் கீழ் ஒரே கூட்டாக செயற்படுவதற்கான ஒரு முடிவை எடுக்க இருக்கின்றோம்.

உண்மையிலேயே எல்லோரையும் அரவணைத்து போக வேண்டும் என்பதுதான் எங்களுடைய பிரதான நோக்கம். அந்த வகையிலே நாங்கள் மீண்டும் அந்த கட்சித் தலைவர்களிடம் இது சம்பந்தமாக கலந்தாலோசித்து நேரில் சென்று அவர்களுடன் பேசி அவர்களை இந்த பலமான ஒற்றுமைக்குள் கொண்டு வருவதற்கான வாய்ப்பை கொண்டு வருவோம்.

சி.வி விக்னேஸ்வரன் தரப்புக்கும் அழைப்பு விடுத்திருந்தோம். விக்னேஸ்வரன் மற்றும் அவருடன் இருக்கின்ற அனைத்து கட்சிகளுக்கும் நாங்கள் அழைப்பு விடுத்திருந்தோம். அந்த வகையில் நாங்கள் மீண்டும் அவர்களை சந்திக்க இருக்கின்றோம்.அவர்களை சந்தித்து ஒற்றுமை தொடர்பில் பலமான கூட்டாக செயற்படுவதற்கு முயற்சியை நாங்கள் மேற்கொள்வோம்.அவர்களும் அதற்கு விரும்புவார்கள் .

அந்த வகையில் ஒற்றுமையை உருவாக்கி ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் எதிர்ப்பை நாங்கள் தடுக்க வேண்டும்.எங்களுடைய இனத்திற்காக எந்த விலையையும் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

சர்வதேசத்தில் எங்களுடைய சார்பாக பல நாடுகள் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.அந்த வகையில் இந்த ஒற்றுமை பலம் சேர்க்கும் வகையில் அமையும் என்பதை நான் கூறுகின்றேன். புலம்பெயர்ந்த உறவுகளை இணைத்துக் கொண்டு இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டு தமிழர்களையும் இணைத்துக்கொண்டு நாங்கள் பலமான சக்தியாக காட்ட வேண்டும். அது காலத்தின் கட்டாயம் .

புளொட் மற்றும் ரெலோவுக்கு நாடாளுமன்றில் நேரம் ஒதுக்குவது சம்பந்தமாக கருத்து சொல்ல விரும்பவில்லை என தெரிவித்து இருந்தீர்கள்.அதே நிலையில் தான் தற்போதும் உள்ளீர்களா என்று கேட்டபோது,ஒற்றுமைக்காக நாங்கள் சில விடயங்களை தவிர்த்து வருகிறோம்.இந்த விடயங்கள் சம்பந்தமாக மக்கள் மத்தியில் சில கேள்விகள் ஏற்படுகிறது.

பிரச்சினைகள் இருக்கின்றது.ஆனால் ஒற்றுமையாக இருக்கின்றோம். இந்த பலம் தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.பிரச்சினை இருக்கின்றது .அதனை பேசித் தீர்க்க வேண்டும்.பேசி தீர்க்கலாம் என்ற வகையில் ஒற்றுமை என்பது மிக முக்கியம்.பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்.

ஆண்டவன் காப்பாற்ற வேண்டும் என்று ஆண்டவர் மேல் பழியை போட்டுவிட்டு இருக்க முடியாது.ஒவ்வொரு அங்குலமாக எங்களுடைய நிலங்கள் பறிபோய் கொண்டிருக்கின்றது.இலங்கை அரசாங்கத்தின் திட்டமிட்ட செயற்பாடுகள் எங்களுடைய தேசத்தில் மிகத் துல்லியமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.அதனை முறியடிப்பதற்கு அனைவரும் ஒன்றுசேர வேண்டும் என்பது தான் காலத்தின் கட்டாயம்.

அரசாங்கம் மிக மோசமான செயற்பாட்டை செய்கின்றது. கடற்பரப்பில் கப்பல் தாழ்ந்ததன் பின்பு எங்களுடைய கடல் பரப்பிலே மிக மோசமான செயற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றது.ஆமைகள், திமிங்கலங்கள் உயிர் இழந்து கரையொதுங்கி வருகின்றன.

மீனவ சமூகம் பெரிய பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றது.அந்த வகையில் அது தவிர்க்கப்பட வேண்டும். ஐரோப்பிய யூனியன் பல கோடி ரூபாயை மீனவ சமூகத்திற்கு கொடுக்கவுள்ளது.அந்த கொடுப்பனவு சிங்கள மீனவர் சமூகத்துக்கு மாத்திரம் சென்றடையக் கூடாது.கடற்றொழில் அமைச்சராக இருக்கின்ற டக்ளஸ் தேவானந்தாவும் இதில் கவனம் எடுத்து செயல்பட வேண்டும்.எங்களுடைய வட-கிழக்கில் வாழ்கின்ற மீனவர்களுக்கும் அந்த பணம் கிடைப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.



# நாட்டில் இன்று முதல் இணையவசதிகளுடன் 2000 பிரதேச கற்றல் வளநிலையங்கள்!

நாட்டின் கல்வி வரலாற்றில் முதல் தடவையாக இன்று 2000 பிரதேச கற்றல்வள நிலையங்கள் ஆரம்பமாகின்றன. கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டு இணையவழிகல்வியினை முன்னெடுக்கமுடியாத மாணவர்களுக்காக இப்புதிய ஏற்பாடு இன்று ஆரம்பித்துவைக்கப்படுகிறது.

கோவிட் தொற்றானது தற்போது உலகின் பல நாடுகளை முடக்கி வைத்துள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பது யாவரும் அறிந்த விடயமே.

இந்த நிலையில் இலங்கையிலும் கோவிட் தொற்று அச்சம் காரணமாக பிறப்பிக்கப்பட்டுள்ள பயணத்தடையால் பலரின் அன்றாட வேலைகள் ஸ்தம்பித்துள்ளன.

அத்துடன் மாணவர்களின் கல்வி நிலையும் கேள்விக்குறியாகவே உள்ளது. பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில் இணையவழியாக கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்மூலம் சில மாணவர்கள் நன்மையடைந்துள்ள போதும் பல மாணவர்கள் அதிலும் குறிப்பாக வறுமையான குடும்பத்தை சேர்ந்த மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் இவ்வனைத்திற்கும் பிரவேசிக்க முடியாத சிக்கல் நிலைமை நாட்டின் 12வீதம் அல்லது அதற்கு சற்று அதிகமான தரப்பினரைப் பாதித்துள்ளது.

இணையவழி கற்கைக்கு தேவையான ஸ்மார்ட் தொலைபேசி கணனி அல்லது மடிக்கணனி போன்றவை இல்லாமலும் அப்படியே அவை இருந்தாலும் கூட, வகுப்பினை மேற்கொள்வதற்கான ஈஅகூஅ போடுவதற்கான பணம் இன்றி அவதிப்படும் நிலை நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

பல மாணவர்கள் தமது பிரதேசங்களில் சமிக்ஞை தழுவல் நிலை (Coverage) இல்லாத காரணத்தால் பலமைல்தூரம் நடந்துவந்து பஸ்தரிப்புநிலையங்களிலும் வேறிடங்களிலும் கூரைகளிலும் அமர்ந்திருந்து கற்றதையும் ஊடகங்கள் வாயிலாக காண முடிந்தது.

பயணத்தடை காரணமாக உழைப்பின்றி கால் வயிறு கஞ்சிக்கே அல்லல்படும் நிலையிலுள்ள குடும்பங்களுக்கு இணைய வழியான கல்வியானது எட்டாக்கனியாகவே உள்ளது.

அன்றாட கூலிக்கு வேலை செய்து வருபவர்களுக்கு இந்த பயணத்தடை பெரிய அடி எனும் நிலையில் அவர்கள் குடும்பத்திற்கு இணைய வழி கல்வி என்பது பேரிடியாகவே காணப்படுகிறது.

அதற்குப்பரிகாரமாக கல்வியமைச்சு இன்று(5)திங்கட்கிழமை முதல் பிரதேச கற்றல் வளநிலையங்களை அறிமுகப்படுத்தி பின்தங்கிய மாணவர்களுக்கு கற்றலை ஏற்படுத்த வசதிசெய்துள்ளது.

கொவிட் தொற்று காரணமாக நாட்டில் சகல பாடசாலைகளும் மூடப்பட்டிருக்கின்றன. இந்நிலையில் இணைய வழியாக கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக தற்போது பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் இணையவழி



தொலைக்கல்வி வழிமுறையினூடாக இடம்பெறுகின்ற போதிலும் பல்வேறான காரணங்களால் அந்த வசதிகளைப் பெறமுடியாத மாணவர்களுக்காக 'பிரதேச கற்றல் நிலையங்களை' நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இணையவசதிகளுடைய குறித்த நிலையங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் அவர்கள் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய இன்று(5) திங்கட்கிழமை முதல் நாடளாவியரீதியில் 2000 பிரதேச கற்றல்வள நிலையங்கள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து செயற்படவிருக்கின்றன.அதற்கா சகல ஏற்பாடுகளையும் அந்தந்த மாகாண வலயக்கல்விப்பணிமனைகள் பூர்த்திசெய்துள்ளன.

மஹிந்தோதையா ஆய்வகங்கள், வணக்கஸ்தலங்களில் நடத்திச்செல்லப்படும் கல்வி நிலையங்கள், சமூக அரங்குகளில் நடத்திச் செல்லப்படும் கல்வி நிலையங்களில் இதுபோன்ற இணைய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத் தலைவர்கள், கல்வி வலயங்களின் பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆகியோர் குறித்த இடங்களை அடையாளப்படுத்தியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

கொவிட் - 19 தொற்று நோய் நிலைமையின் கீழ் பாடசாலைகள் திறக்கப்படாமையின் காரணமாக தற்போது கற்றல் நடவடிக்கைகள் தொலைக்கல்வி/இணையவழி முறைமையிலேயே இடம்பெறுகின்றன. அதேவேளை குருகுலம், இதக்சலாவ மூலமாக பிள்ளைகளுக்கான கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இதக்சலாவ மூலமாக ஆசிரியர்களுக்கு 'வர்ச்சுவல் வகுப்பறை' உருவாக்கப்பட்டு கல்வியைப் பெறுவதற்கான கற்றல் முகாமைத்துவ கட்டமைப்பின் மூலமாக வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த இதக்சலாவ நிகழ்ச்சியில் 65000 பாட அலகுகள் உள்ளடக்கப்பட்டுள்ள அதேவேளை ஒரு நாளைக்கு சுமார் 2லீ இலட்சம் பேர் இதற்குள் பிரவேசித்தும் வருகின்றனர். கடந்த மாதம் 3.5 மில்லியன் பேர் இதற்குள் பிரவேசித்திருந்தனர்.

குருகுலம் நிகழ்ச்சி தொலைக்காட்சியில் 'ஐ அலைவரிசை' ஊடாக சிங்கள மொழியிலும் 'நேத்ரா அலைவரிசை' ஊடாக தமிழ் மொழியிலும் செயற்படுத்தப்படுகின்றது. ஒரு நாளைக்கு 16 மணித்தியாலங்கள் என்ற வகையில் 05 நாட்கள் ஒளிபரப்பாகும் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக தரம் 03 தொடக்கம் உயர் தரம் வரையிலான சுமார் 5000 பாடங்கள் ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. இதக்சலாவ நிகழ்ச்சியை பயன்படுத்துவதற்கு எதுவிதமான கட்டணமும் அறவிடப்படுவதில்லை. மேற்படி இணையதள மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் 'கல்வி பண்புத்தர அபிவிருத்தி மற்றும் தேசிய கல்வி நிறுவனம்' என்பவற்றின் முழுமையான தரப்படுத்தலுக்கமைவாக மேற்கொள்ளப்படுகின்றது.



அத்துடன் மாகாண, கோட்டகல்வி, பாடசாலை மற்றும் வகுப்புக்கள் என்ற அடிப்படையில் சமூக ஊடகங்கள் மற்றும் அச்சு ஊடகங்கள் வாயிலாக பெருமளவிலான நிகழ்ச்சிகள் உரிய விடயதான பணிப்பாளர்களின் மேற்பார்வையின் கீழ் நடாத்தப்படுகின்றன. எனினும் இவ்வனைத்திற்கும் பிரவேசிக்க முடியாத சிக்கல் நிலைமை நாட்டின் 12 மூ அல்லது அதற்கு சற்று அதிகமான தரப்பினரைப் பாதித்துள்ளது.

அதனடிப்படையில் கல்வி அமைச்சானது, பிரதேச கற்றல் நிலையங்களை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடந்த 17 ஆம் திகதி சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளது. சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக சிறு குழுக்களாக ஒன்றுகூடக் கூடிய இடங்களில் கிராமிய ரீதியாக ஆரம்பிப்பதற்கு கல்வி மறுசீரமைப்புஇ திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சுஇ மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்திஇ முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவை இராஜாங்க அமைச்சு மற்றும் டிஜிட்டல் தொழிநுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு ஆகியன இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன.

அந்த நிலையங்கள் காலை 7.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரையில் திறந்து வைக்கப்படவுள்ளன. அந்த நிலையங்கள் ஆகக் குறைந்தது 10 கணினிகள், மடிக்கணினிகள் மற்றும் டெப் கணினிகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். அதன் செயற்பாடுகள் பற்றியதான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் வலய மட்டத்திலும் மேற்பார்வை மற்றும் வழிகாட்டல்கள் மாகாண மட்டத்திலும் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை கொரோனா அச்சம் காரணமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளை இந்த மாத இறுதிக்குள் மீளத்திறக்க எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அறிவித்துள்ளார்.

அதற்கமைய பாடசாலைகள் திறக்கப்பட முன் அனைத்து ஆசிரியர்களுக்கும் தடுப்பூசி நிச்சயம் அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

50 மாணவர்களுக்கும் குறைவான 1439 பாடசாலைகள் 50 தொடக்கம் 100 மாணவர்கள் வரையான 1523 பாடசாலைகள் என 2962 பாடசாலைகளை மீளத்திறக்க உத்தேசித்திருப்பதாகவும் சுகாதார நிபுணர்களின் கருத்துக்களைப் பெற்றவுடன் இறுதி முடிவை எடுப்பதாகவும் கல்வியமைச்சர் தெரிவித்தார்.

அதன்படி 100 இற்கும் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை இந்த மாதத்திற்குள் திறப்பது குறித்து அவதானம் செலுத்துவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மறுபுறம் நாட்டின் 10 மாவட்டங்களில் உயர் வலுவுடைய தொலைத் தொடர்பாடல் கோபுரங்கள் அமைக்கப்படும் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட 10 மாவட்டங்களில் உள்ள கிராமிய பிரதேசங்களில் இந்த தொலைத் தொடர்பாடல் கோபுரங்கள் அமைக்கப்பட இருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

ஒன்லைன் மூலம் கற்றுவரும் மாணவர்களுக்கு எந்தவித தடையும் இன்றி இலகுவான முறையில் கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும்.

இந்தப் பிரதேசங்களில் முதலில் தொலைத் தொடர்பாடல் கோபுரங்கள் நிறுவப்பட வேண்டும் என்பது பற்றி கவனம் செலுத்துமாறு தான் இலங்கை தொலைத் தொடர்பாடல் ஒழுங்குறுத்தல் ஆணைக்குழுவுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

மொத்தத்தில் பாடசாலைகள் முறைப்படி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரான காலப்பகுதியில் இத்தகைய கற்றல்வள நிலையங்களை ஆரம்பித்து நடாத்துதல் வரவேற்புக்குரியது.

**வி.ரி.சகாதேவராஜா**

# நாட்டில் புரையோடிய அத்தனை பிரச்சினைகளுக்கும் காரணம் கடந்த கால ஆட்சியாளர்கள் விட்ட அரசியல் பிழைகளே!

## : முஷாரப் முதுநபின் எம்.பி

(நூருல் ஹுதா உமர்)

சகல இனமும் வாழும் பிரதேசமே பொத்துவில். நாட்டில் இப்போது உள்ள அதிகமான பிரச்சினைகளுக்கு காரணம் இனநல்லிணக்கம் இல்லாமையே. இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் இலங்கையர்களிடையே தேசப்பற்றையும் உருவாக்க வேண்டும். அதன் மூலமே அழகிய அபிவிருத்தி அடைந்த சுபீட்ஷமான நாடாக இலங்கையை உருவாக்க முடியும். கடந்த கால அரசாங்கங்கள் விட்ட தவறே நாடு இவ்வளவு மோசமாக பாதிக்கப்பட காரணமாக அமைந்தது என திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் முதுனபின் தெரிவித்தார்.

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஓய்வு நிலை மேஜர் ஜெனரல் முஹம்மட் சாத் கத்தாக் கலந்து கொண்ட இலங்கை - பாகிஸ்தான் நட்புறவுக்கான நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பொத்துவிலில் இடம்பெற்ற போது அந்த நிகழ்வில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு உரையாற்றுகையில், பொத்துவில் பிரதேசம் மூவின மக்களும் ஒன்றாக இணைந்து வாழ்கின்ற பிரதேசமாக



உள்ளது. அதனடிப்படையில், முழுநாட்டுக்கும் இன நல்லிணக்கம், சகவாழ்வு ஆகியவற்றுக்கு முன்மாதிரியாக கொண்ட ஊராக பொத்துவிலை மாற்ற வேண்டியதே எனது முதல் குறிக்கோள்.

பொருளாதார ரீதியாக வளர்ந்த நாடுகளில் காணப்படும் பல நல்ல பண்புகளில் ஒன்றாக சகவாழ்வு இருக்கிறது. ஆனால் ஏனைய நாடுகளில் இல்லாத பல சிறப்பியல்வுகளும், சகல வளமும் உள்ள நாடே இலங்கை. எமது நாட்டில் இனங்களுக்கிடையே நல்லுறவை கட்டியெழுப்பினால் நாட்டை வளர்ச்சிப்பாதைக்கு கொண்டுசெல்ல முடியும். பொத்துவிலில் தண்ணீர், காணி என பல பிரச்சினைகள் உள்ளது. இவற்றை ஒற்றுமையுடன் ஒரே குரலில் கடந்த காலங்களில் தீர்வுக்காக பேசியிருந்தால் எம்மால் சாதித்திருக்க முடியும். ஒற்றுமையாக எமது பிரச்சினைகளுக்காக பொத்துவில் மக்களாகிய நாம் ஒன்றிணைந்து வெல்ல இனி அணிசேர வேண்டும் என்பதுடன் இனநல்லிணக்கம், தேசப்பற்று ஆகியவை மூலமே அழகிய அபிவிருத்தி அடைந்த சுபீட்ஷ மான நாடாக இலங்கை உருவாக முடியும் எனவும், இன நல்லிணக்க செயற்பாடுகளில் இலங்கை அரசாங்கத்தோடு தோளோடு தோள் நின்று பாகிஸ்தான் உதவ வேண்டுமென கேட்டுக் கொண்டார். இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலைப் பொதிகள், விளையாட்டு கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், மாற்றுத் திறனாளிகளைக் கொண்ட குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது, பாகிஸ்தான் உயர் ஸ்தானிகரிடம் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் முதுனபினினால் பொத்துவில் எல்லைப் புற கிராமத்தில் வீடமைப்புத் திட்டம் ஒன்றை அமைத்துத் தருவதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டதோடு, அதற்கான செயற்றிட்ட வரைபுகள், ஆவணங்கள் என்பன உயர் ஸ்தானிகரிடம் கையளிக்கப்பட்டது.

# தனிமைப்படுத்தலிலுள்ள மருதமுனை மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்க நடவடிக்கை!



(அஸ்லம் எஸ்.மௌலானா)

மருதமுனையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருக்கின்ற மசூர் மௌலானா வீதி தொடக்கம் நூலக வீதி வரையான பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு அத்தியவசிய சேவைகள் தங்குதடையின்றி கிடைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று, சனிக்கிழமை (03) இரவு கல்முனை மாநகர சபையில் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, கல்முனை மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அர்ஷாத் காரியப்பர், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர். எம்.அஸ்மி, மாநகர சபை உறுப்பினர்களான எம்.எஸ். உமர் அலி, ஏ.ஆர்.அமீர், மருதமுனை ஜம்மியதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி எம்.எல்.முபாறக் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது தனிமைப்படுத்தல் பிரதேசத்திற்குட்பட்ட மக்களுக்கு அத்தியவசிய உணவுப் பொருட்களை நடமாடும் விற்பனை ஊடாக விநியோகம் செய்தல், பொது அமைப்புகளின் ஊடாக நிவாரணப் பொருட்களை பெற்றுக் கொடுத்தல், அரசாங்க ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் தவிர்ந்த மக்களுக்கு அரசாங்கம் வழங்கும் உலர் உணவை விரைவாகப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் நோயாளிகளுக்கு அவசர மருத்துவ சேவைகளை வழங்குதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

அதேவேளை மாட்டிறைச்சி, கோழி இறைச்சி, மீன், மரக்கறிகள், முட்டை, பேக்கரி உணவுகள் உள்ளிட்ட அத்தியவசிய உணவுப் பொருட்களை விற்பனை செய்வதற்கான முகவர்களை உடனடியாகத் தெரிவு செய்து, சேவையில் ஈடுபடுத்துவது குறித்து கூடிய அவதானம் செலுத்தப்பட்டதுடன் இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைவாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாநகர முதல்வரினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் மருதமுனையின் குறித்த பிரதேசத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

# மண் வளப் பரிசோதனை கருவிகள் அடங்கிய உபகரணங்கள் கையளிப்பு!



(எம்.ஏ.றமீஸ்)

ஜனாதிபதியின் எண்ணக்கருவில் உருவான சௌபாக்யா சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் மூலம் இயற்கையான உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிக்கச் செய்து விவசாயச் செய்கையாளர்களின் வாழ்வில் ஒளியேற்றும் மக்கள் நல செயற் திட்டங்கள் தற்போது நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வேலைத் திட்டத்திற்கமைவாக, அம்பாறை மாவட்டத்தில் உள்ள மண்வளத்தினை பரிசோதனை செய்து அம்மண் வளத்திற்கேற்ப விளைத்திறனும், உற்பத்தித் திறனும் வாய்ந்த இயற்கை உரப்பாவனையினை மேற்கொண்டு சிறந்த விளைச்சலைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டம் அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விவசாய அமைச்சின் மூலம் நடைமுறைப் படுத்தப்படும் இவ்வேலைத் திட்டம், அட்டாளைச்சேனை உதவி விவசாயப் பணிப்பாளர் காரியாலயத்தில் இடம்பெற்றது. அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எம். எம்.ஏ.சனீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது விவசாய அமைச்சின் உதவி விவசாயப் பணிப்பாளர் அனுர விஜயதுங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வேலைத் திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.

# சம்மாந்துறை வலயத்தில் 16 தொலைக்கல்வி வள நிலையங்கள்!

(வி.ரி.சகாதேவராஜா)

## வலயக்கல்விப் பணிப்பாளர் நஜீம்!!

கொவிட் காரணமாக கல்வி அமைச்சினால் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற தொலைக்கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைவாக சம்மாந்துறை வலயத்தில் 16 பாடசாலைகள் தொலைக்கல்வி வள நிலையங்களாக (Distance Learning Resource Centres (DLRC) தெரிவு செய்யப்பட்டுள்ளன .

குறித்த 16 வள நிலையங்களும் இன்று(5)திங்கட்கிழமை காலை 7.30மணிக்கு தமது பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கின்றன என சம்மாந்துறை வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ். சஹறுதுல்நஜீம் தெரிவித்தார்.

இவ்வள நிலையங்களின் செயற்பாடுகள் இன்று திங்கட் கிழமை ஆரம்பிக்கப்பட உள்ளதால் இவ்வள நிலையங்கள் அமைந்துள்ள பாடசாலைகளின் இபிஎஸ்ஐ இணைப்பாளர்கள் அதிபர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி இதன் செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு ஒத்துழைப்புகளை வழங்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சம்மாந்துறை வலயத்தில் தெரிவான 16வள நிலையங்களும் பின்வரும் பாடசாலைகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி ,அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி, தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயம், அல்அர்சத் மகாவித்தியாலயம், செந்நெல்சாஹிறா மகாவித்தியாலயம், அல்அஸ்ஹர் வித்தியாலயம், மல்வத்தை விபுலாநந்தா மகாவித்தியாலயம் ,மஜீட்புரம் மகாவித்தியாலயம், நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயம், அஸ்ஸிறாஜ் மகாவித்தியாலயம், றாணமடு இந்து மகாவித்தியாலயம் , மத்தியமுகாம் மத்திய கல்லூரி, சொறிக்கல்முனை ஹொலிகுறோஸ் மகாவித்தியாலயம் ,இறக்காமம் அஸ்ரப் மத்திய கல்லுரி, அல்அமீன் மகாவித்தியாலயம், வாங்காமம் ஒராபிபாஷா வித்தியாலயம் ஆகிய 16பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு வளநிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அங்கு காலை 7.30மணிமுதல் பிற்பகல் 3.30மணிவரை பாடங்கள் ஆசிரியர்களால் போதிக்கப்படவுள்ளன.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நான்கு முக்கிய பிரிவுகள் திறந்துவைக்கப்பட்டது!

(எம்.ஐ.எம். றியாஸ்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய அதி தீவிர சிகிச்சை பிரிவு (ICU), விசேட வைத்திய நிபுணர்கள் ஓய்வறை (Consultant Longue), வைத்தியசாலை நூலகம் (Hospital Library) மற்றும் உடற்பயிற்சி சிகிச்சை பிரிவு (Physiotherapy unit) என்பன



சனிக்கிழமை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஐ.எம்.ஜவாஹிர் தலைமையில் அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி அவர்களினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா அவர்களின் முழு முயற்சியினால் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையானது இப்பிராந்திய பொதுமக்களின் சுகாதார, மருத்துவ,ஆரோக்கிய சேவைகளை சிறப்பாக நிறைவேற்றி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த திறப்பு விழா சிறப்பு நிகழ்வில் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், வைத்தியசாலை நலன்விரும்பிகள், மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.